முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

# O.S. No.21/2019

2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பவன்குமார் | தந்தையார் பெயர் | ராம்சரன்பிரசாத் யாதவ் |
| கிராமம் | மன்னார்குடி | வட்டம் | மன்னார்குடி |
| தொழில் | | வயது | 47 |

**(சாட்சியின் அடையாள அட்டை சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இந்த வழக்கில் 3-ம் தரப்பினர்.

சாட்சியிடம் ஆங்கிலத்தில் கேள்விகள் கேட்கப்பட்டு அவர் கூறிய பதில் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு தட்டச்சு செய்யப்படுகிறது.

நான் தற்போது மன்னார்குடி இந்தியன் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். வாதி ராஜேந்திரன், பிரதிவாதி வீரசிங்கம்

அவர்களது தாயார் நவநீதம் மூவர்களும் எங்களது வங்கியில் என்ன வகையான கடன் பெற்றுள்ளார்கள் என்றால் Agriculture Term Loan பெற்றுள்ளார்கள். எதற்காக என்றால் போர்வெல் அமைப்பதற்காக பெற்றுள்ளார்கள். வங்கியில் கடன் பெற்ற தேதி 22.10.2005, கடன் தொகை ரூ.1,27,500/- ஆகும். மேற்படி மூவர்களால் எங்களது வங்கியில் என்ன வகையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றால் சிட்டா அடங்கல், கிரய பத்திரங்கள், 20.09.1987 ன் உயில் ஆவண அசல் ஆகியன. மேற்படி மூவரும் எங்களது வங்கியில் பெற்ற கடனை திருப்பி செலுத்தவில்லை. மேற்படி மூவராலும் வாங்கப்பட்ட கடன் தொகையை திரும்ப செலுத்தாத காரணத்தினால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் அ.வ. எண் 17/2017 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கானது ராஜேந்திரன், வீரசிங்கம் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடன் தொகையானது 20.09.1987 உயிலின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அசல் உயில் ஆவணமானது எங்களது வங்கியில் கடன்தாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டு அது சட்ட நடவடிக்கைக்காக மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண் 17/2017 வழக்கு கோப்பில் இருந்து வருகிறது. இன்றைய தேதியில் மேற்படி கடன் சம்மந்தப்பட்ட எங்கள் வங்கியில் பராமரிக்கப்படும் கோப்புடன் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க

வந்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

மன்னார்குடி சார்பு நீதிமன்ற அ.வ.எண் 17/2017 ல் போர்வெல் கடனை நவநீதம், ராஜேந்திரன், வீரசிங்கம் ஆகியோர் பெற்றுள்ளார்கள். கடன்தாரர்கள் மூவரில் நவநீதம் அம்மாள் இறந்த பிறகு மீதமுள்ள இருவர் பெயரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நவநீதம்தான் Main Borrower, நவநீதம் அம்மாள் இறந்த பிறகு மன்னார்கு சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நவநீதம் அம்மாள் இறப்பிற்கு பின் ராஜேந்திரன், வீரசிங்கத்தை தவிர வேறு யாரேனும் வாரிசுதாரர்கள் உண்டா என விசாரித்தேனா என்றால் Letter of revival ல் ராஜேந்திரன் மற்றும் வீரசிங்கம்தான் கையொப்பம் இட்டு கொடுத்துள்ளார்கள். மன்னார்குடி சார்பு நீதிமன்ற அ.வ.எண் 17/2017 ல் மற்ற வாரிசுதாரர்களை சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி நான் கருத்து கூற இயலாது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.03.21 15:01:44 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S. No.21/2019

2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளமாறன் | தந்தையார் பெயர் | பஞ்சவர்ணம் |
| கிராமம் | மன்னார்குடி | வட்டம் | மன்னார்குடி |
| தொழில் | | வயது | 55 |

**(சாட்சியின் அடையாள அட்டை சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 3-ம் தரப்பினர். நான் நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். என் தந்தை பஞ்சவர்ணத்தின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். பஞ்சவர்ணத்தின் தந்தை பெயர் தங்கவேல். என் தந்தை கடந்த 06.09.2014 ல் இறந்து விட்டார். வா.சா.ஆ.2 ல் சாட்சி 2 ஆக கண்டுள்ள கையொப்பம் என் தந்தையினுடையது. வா.சா.ஆ.2 ல் என் தந்தை கையொப்பம் செய்துள்ளார். அதில் பஞ்சவர்ணம் என கண்டுள்ளது. No.27, செருமங்கலம் என்ற முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது. தேதி 20.09.1987 என குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை**

நான் வாதியின் பங்காளியாவேன். நான் சம்மன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. வா.சா.ஆ.2 ல் உள்ள கையொப்பத்திற்கும் Voter ID ல் உள்ள கையொப்பத்திற்கும் மாறுபாடு உள்ளதா என்றால் உள்ளது. Voter ID ல் கண்டுள்ள கையொப்பம் 2005 ல் போடப்பட்ட கையொப்பமாகும். உயிலில் கண்டுள்ள கையொப்பம் 1987 ல் உள்ள கையொப்பம். இரு ஆவணங்களுக்குமிடையே 15 ஆண்டுகள் வித்தியாசம் உள்ளது. வா.சா.ஆ.2 ல் உள்ள கையெழுத்து என் தந்தையார் கையெழுத்து இல்லை எனவும் வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.03.21 15:01:52 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.